செய்தி வெளியீடு எண் : 1155 நாள் : 06.08.2024

# செய்தி வெளியீடு

மாநில திட்டக் குழு அலுவலகத்தில் ஆளுகைக்கான புத்தாக்க மையத்தினை மாநில திட்டக் குழுவின் துணைத் தலைவர் முனைவர் ஜெ.ஜெயரஞ்சன் அவர்கள் இன்று (06.08.2024) திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் திரு ரமேஷ் சந்த் மீனா, இ.ஆ.ப., அரசு கூடுதல் தலைமை செயலாளர், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை, பேரா. இராம சீனிவாசன் (முழுநேர உறுப்பினர்), பேரா. ம. விஜயபாஸ்கர் (கூடுதல் முழு நேர உறுப்பினர்), திருமதி எஸ். சுதா., இ.வ.ப., (உறுப்பினர் செயலர்) மற்றும் பகுதி நேர உறுப்பினர்களான மருத்துவர் எழிலன் நாகநாதன், சட்ட மன்ற உறுப்பினர், (ஆயிரம்விளக்கு), திரு. கே. தீனபந்து, இ.ஆ.ப,(ஓய்வு), மருத்துவர் ஜோ. அமலோற்பவநாதன், மருத்துவர் கு.சிவராமன், பத்மஸ்ரீ நர்த்தகி நட்ராஜ் மற்றும் மாநிலத் திட்டக்குழுவின் அதிகாரிகள் பங்கேற்றனர்.

மறுசீரமைக்கப்பட்ட மாநில திட்ட குழுவின் (www.spc.tn.gov.in) இணையதளம் (www.spc.tn.gov.in) மற்றும் புதியதாக தோற்றுவிக்கப்பட்ட தமிழ்நாடு நிலப் பயன்பாடு ஆராய்ச்சி வாரியத்தின்(www.tnslurb.tn.gov.in) இணையதளம், தமிழ்நாடு புதுமை முயற்சிகள் திட்டத்தின் (www.tanii.tn.gov.in) இணையதளத்தின் பயன்பாட்டினை மாநில திட்டக் குழுவின் துணைத் தலைவர் துவக்கி வைத்தார்.

தமிழ்நாடு புதுமை முயற்சிகள் திட்டத்தின் கீழ் நிதியளிக்க தேவையான திட்ட முன்மொழிவுகள் உருவாக்குவதில், அரசு துறைகள், மாவட்ட நிருவாகம் மற்றும் தகுதி வாய்ந்த அரசுசார் நிறுவனங்களுக்கு புத்தாக்க முயற்சிகள் மேற்கொள்வதும் இந்த ஆளுகைக்கான புத்தாக்க மையத்தின் நோக்கமாகும். தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் (TANII) துவங்கப்பட்ட 2015–16 ஆம் ஆண்டு முதல் சுமார் 800 கோடி ரூபாய் மதிப்புள்ள 400 க்கும் மேற்பட்ட புதுமையான திட்டங்களை மாநில திட்டக் குழு பரிந்துரைத்துள்ளது. துறைசார் சிக்கல்களை கண்டறிந்து புதுமையான தீர்வுகள் மூலம் இந்த மையம் தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டத்தின் செயல்பாட்டினை வலுப்படுத்தும்.

இந்தியாவில் முதல் முறையாக அரசு மற்றும் அரசு சார் நிருவாகங்களில் புத்தாக்கத்தை புகுத்தி ஆளுகை திறனை மேம்படுத்தும் நோக்கத்துடன் தமிழ்நாடு அரசு இம்மையத்தை அமைத்துள்ளது.

சமூக நல மேம்பாட்டிற்காக, பல தரப்பட்ட நிறுவனங்களுடன் இணைந்து புத்தாக்க தீர்வுகளை கண்டறிந்து, அதனை செயல்படுத்தி அத்திட்டங்களின் தாக்கங்களை மதிப்பீடு செய்து ஆவணப்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

முன்னேறிய உலக நாடுகள் மற்றும் இந்தியாவில் பிற மாநிலங்களில் பின்பற்றி வரும் நல் ஆளுகை (Best practices) நடைமுறைகளை, தமிழகத்தில் நடைமுறைப்படுத்தும் சாத்தியக் கூறுகள் குறித்தும் பரிசீலனை செய்யப்படும்.

வளர்ந்து வரும் புதிய தொழில்நுட்பங்களின் பயன்பாடு குறித்து GovTech கருத்தரங்கம், மாவட்ட நிருவாகத்திற்கான Design Thinking பயிற்சி பட்டறை, தொழில்நுட்பம் சார்ந்த ஹேக்கத்தான்கள் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**உறுப்பினர் செயலர்**
**மாநில திட்டக் குழு**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu